# பாடம் 08

## இரக்கமுள்ள இறைத்தந்தை



1. முன்னொருநாள் செல்வந்தனும் கருணை உள்ளமும் கொண்ட தந்தை
புதல்வர் இருவரோடும் வாழ்ந் திருந்தார் இன்பமாக
2. இளைய மகனும் ஓர் நாள் அன்புத் தந்தையை வருத்தி தமக்குரிய பணத்தைக் - கேட்டு நின்றான் உடனே தருமாறு.
3. அன்பு கொண்ட தந்தை அன்று மகனுக்குரிய சொத்தை உடனே பிரித்துக் கொடுத்தார் வேதனை யோடு.


4. தமக்குக் கிடைத்த சொத்துக் களை விற்று பணமாக்கிக் கொண்டு தாம் விரும்பிய வழியிற் சென் றான் சின்ன மகன்.
5. அளவுக்கதிகமான பணமுமிருக்க - நண்பர்களும் கூட வர செலவு செய்தான் மனம் போல - மறந்து விட்டான் கிறிஸ்தவ வாழ்வை.
6. பணமுமில்லை நண்பர்களுமில்லை - தந்தைக்குப் பிள்ளையுமில்லை அலைந்தான் திரிந்தான் வேலையு மில்லை. மேய்த்தான் பன்றிகளை.
7. இல்லாமை தலை தூக்கிடவே - உண வின்றிப் பரிதவித்தான்.
பசிக்கொடுமை தாங்காது -உண்டான் பன்றிகளின் உணவை.



8. தான் செய்த பிழையை எண்ணி-
அழுதான் வருந்தி வருந்தி
வேண்டி நின்றான் மன்னிப்பு -
தந்தையின் காலில் வீழ்ந்து.

9. மகிழ்ச்சி பொங்க அன்புடனே
வரவேற்றுக் கட்டி அணைத்து
ஒழுங்குகள் பல செய்திட்டார் -
விழா எடுக்க.

10. அன்பு இறைத்தந்தை என்றும்
மனம் வருந்தும் குற்றவாளியை
மன்னித்து ஏற்றுக் கொள்ள
ஆவலுடன் காத்திருக்கிறார்
என்றும்.



இந்தக் கவிதையில் வரும் தந்தையின் அன்பைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இதே போன்று தான் நம் அன்பு இறைத் தந்தை நாம் செய்யும் குற்றங்களையும் மன்னிக்கிறார். நம்மை அன்புடன் அரவணைக்க ஆவலோடு காத்திருக்கிறார்.

இறைத் தந்தையிடமிருந்து நமக்கு மன்னிப்புப் பெற்றுக் கொள்ள முடியுமா என்று பார்ப்போம். ஆம் முடியும். அது எப்படி?

ஒப்புரவு திருவருட்சாதனத்தின் மூலம்.
மேற்படி கவிதையில் வரும் இளைய மகன் தான் செய்த பிழைகளை எண்ணி மனம் வருந்தினான். மீண்டும் தந்தையிடம் சென்று மன்னிப்பு வேண்டி நின்றான்.

நாமும் அடிக்கடி குற்றம் செய்கிறோம். அன்று குற்றம் செய்த மகன் தந்தையைத் தேடிச் சென்றான். இன்று நாம் குற்றம் செய்தவுடன் எமது அருட் தந்தையிடம் போக வேண்டும்.

இயேசுவிடம் சென்ற பாவிகள் அனைவரும் பாவமன்னிப்புப் பெற்றார்கள் என நாம் முன்னொரு பாடத்தில் படித்தோம். இயேசு நாதர் பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தைத் தமது சீடர்களுக்கு வழங்கினார். எனவே கிறிஸ்துவின் பெயரால் நியமிக்கப்பட்டுள்ள அருட்தந்தையர்களுக்கு அந்த வல்லமை அருளப்பட்டிருக்கிறது.

ஆகவே நாம் குற்றங்கள் செய்யும் போது இறைத் தந்தையிடம் மன்னிப்புப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அருட் தந்தை ஒருவரைச் சந்தித்து மன்னிப்புப் பெற்றுக்கொள்ளுவது மிக முக்கியமாகும். எனவே குற்றம் செய்தால் அருட் தந்தையிடம் செல்லுங்கள்.

பாருங்கள் நீங்கள் எவ்வளவு அதிஷ்டசாலிகள் என்று. குற்றம் செய்தாலும் இறை தந்தை எம்மை மன்னிக்கிறார். ஆகவே ஒப்புரவுத் திருவருட் சாதனத்தைப் பெற்றுக் கொள்ளத் தயங்காதீர்கள்.

ஒப்புரவு திருவருட்சாதனத்தைப் பெற்றுக் கொள்ளும் முறை

1. நீங்கள் செய்த குற்றங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.
2. அவற்றிற்காக மனம் வருந்துங்கள்.
3. இனிமேல் பாவம் செய்வதில்லை என்று இறைத் தந்தையிடம் உறுதி கூறுங்கள்.

4. நீங்கள் செய்த பிழைகள் யாவையும் மறைக்காமல் அருட் தந்தையிடம் கூறுங்கள்.
5. குருவானவர் தரும் தண்டனைகளை நிறைவேற்றுங்கள்.

மன்னிப்பு வேண்டுவோம்.
என் ஆண்டவரே, நான் உமக்கு எதிராகச் செய்த பாவங்களுக்காகவும் குற்றங்களுக்காகவும் மனம் வருந்துகிறேன். இனிமேல் ஆண்டவரே பாவம் செய்யாமலும் குற்றங்கள் புரியாமலும் வாழ எனக்கு வரமருள வேண்டும் என்று மன்றாடுகிறேன் ஆமென்.

**ஒப்படை**

1. இந்தக் கவிதையில் வரும் மகன் செய்த பிழை என்ன?
2. இங்கே காணும் தந்தை மகிழ்ச்சி அடைந்த காரணம் யாது?
3. பாவமன்னிப்பு பெற்றுக்கொள்ளும் திருவருட் சாதனத்தின் பெயர் என்ன?
4. பாவ மன்னிப்பு பெற்றுக்கொள்ளும் திருச்சடங்கிற்கு அவசியமான காரணங்கள் ஐந்தையும் உமது பயிற்சிப் புத்தகத்தில் எழுதுக.